# திருத்தேவனார் தொகை

## (கீழைச் சாலை)

**மண்ணித்துறை வாழி!** — ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப் பெற்ற திவ்ய தேசத்து எம்பெருமான்களுக்குத்தனிப் பெருமை உண்டு. அப்பெருமான்களைக் கிட்டி வணங்கிப் பயன் பெறவேண்டுவது ஒவ்வொருவரின் கடமை. அந்த எம்பெருமான்களால் அந்த ஊர்களுக்கே பெருமை; அவ்வூரிலுள்ளவர்க்குப் பெருமை; அவ்வூர்களிலுள்ள மற்ற உயிரினங்கள்; செடி கொடிகள், ஆறு குளம் எல்லாவற்றுக்கும் பெருமை; ஒரு திவ்யதேசம் இத்தனை பெருமைகளையும் பெற்று விளங்குகிறது என்றால், அதற்கு ஆழ்வார்களின் மங்களாசாஸனமே காரணமாகும்.

## ஸ்ரீதலசயனத்துறைவார்

அப்படிப்பட்ட ஆழ்வார்களுக்கும், அவர்கள் அவதரித்த இடங்களுக்கும், அவர்களின் தொடர்புபெற்ற எல்லாப் பொருள்களுக்கும் பல்லாண்டு பாடுவது திருமாலடியார்களின் செயலாகும். நம்மாழ்வாரின் சரித்திரத்தையும், அவர் வேதம் தமிழ் செய்து உலகுக்கு அளித்துத் (திருந்தாதார் தம்மைத்) திருத்திய செயற்கரிய செயலையும் நினைக்கும் போதெல்லாம் 'திருப் பொருநல் வாழி! திருநாட்டுத் தென்குருகூர்வாழி... ...வாழிசடகோபன் இட்டத் தமிழ்ப்பாவிசை' என்று பெரியோர்கள் உளங்களித்து வாழ்த்துவதைக் காண்கிறோம்.

மாறன் பணித்த தமிழ்மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்தவர் திருமங்கையாழ்வார். அமுதினும் இனிய தமிழ்ப்பாசுரங்களை அருளிச் செய்தவர். பலதிவ்யதேசங்களை சம்பாதித்து நமக்குக் கொடுத்தவர். இவரை நினைக்கும் போதெல்லாம் இவரைக்கொடுத்துதவிய திருக்குறையலூரும், அவ்வூரைத் தம் இடங்கொண்ட திருமங்கை

நன்றாடும், அந்நாட்டை வளமுறச் செய்யும் வற்றாவரு புனல் மண்ணியாறும், ஆழ்வார் அருளிய ஒலிமிக்க பாடல்களும் ஆசாரியர்களின் திருவுள்ளத்தில் தோன்றி நீங்கா நினைவாக நிலைத்து நிற்கின்றன. 'மங்கை நகர் வாழி வண்குறையலூர்வாழி! செங்கை அருள்மாரி சீர் வாழி, பொங்கு புனல் மண்ணித்துறைவாழி, வாழி பரகாலன் எண்ணில் தமிழ்ப்பாவிசை! என்று வாழ்த்துகிறார்கள்.

**திருத்தேவனார் தொகை:—** 'கங்கை கங்கை' என்று சொன்னாலே பாவத்தைப் போக்கும் சிறப்பினைக் கொண்ட கங்கைக் கரையையும், கங்கையிற் புனிதமாய காவிரிக் கரையையும் மிகவும் விரும்பிப் பகவான் பலதிவ்ய தேசங்களை ஏற்படுத்திக் கொண்டு எழுந்தருளி இருப்பது போல் மண்ணியாற்றின் கரையையும் விரும்பி கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறான். மண்ணியாற்றின் வடகரையில் திருவாலி திவ்யதேசமும், தென்கரை மேல திருத்தேவனார் தொகை என்ற திவ்ய தேசமும் இருக்கின்றன. இவ்வூரை (திருத்தேவனார் தொகையை) மாதவப் பெருமாள் ஸன்னிதி என்றும் கீழச்சாலை என்றும் கூறுவர். அப்பகுதியிலுள்ளோர் அனைவரும் கீழ்ச்சாலை, கீழச்சாலை, கீழைச்சாலை என்றே கூறுகிறார்கள். திருத்தேவனார் தொகை என்ற பெயர் காதில் படுவதே அரிதாக இருக்கிறது!

இந்த எம்பெருமானுக்கு மாதவன் என்று திருநாமம். நின்ற திருக்கோலம். க்ஷீராப்தி நாச்சியார் என்ற பெயரோடு தாயார் எழுந்தருளி இருக்கிறாள். இந்த ஸன்னதியில் மாதவப் பெருமாள் மேற்கு நோக்கியும், (பாற்கடலில் தோன்றிய மகாலக்ஷ்மி) க்ஷீராப்தி நாச்சியார் கிழக்கு முகமாக மாதவன் மீது அருள் நோக்கைப் பொழிந்து கொண்டும் இருக்கும் காட்சி ஸேவிப்பவர்களுக்குப் பெரும் பாக்யத்தை அளிக்கவல்லது.

**இயற்கையில் பதிந்த நெஞ்சம்:—** எம்பெருமான் சில இடங்களில் மலைமீது எழுந்தருளி இருக்கிறான். சில இடங்களில் சோலைகளின் நடுவில் எழுந்தருளி இருக்கிறான், மற்றும் ஆற்றங்கரையிலும், கடற்கரையிலும் பெரிய நகரங்களிலும் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறான், ஆழ்வார்கள் அந்தந்த எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்யும்போது அவர்களது பெருமைகளிலும், அழகிலும், குணங்களிலும் மனத்தைப் பறி கொடுப்பதைப்போல் அவன் இருக்கும் இடத்தின் சூழ்நிலையில் காணப்படும் இயற்கைக் காட்சிகளிலும் மனத்தைச் செலுத்திப் பாசுரங்களை அருளிச் செய்கிறார்கள். திருவரங்கம் திருவேங்கடம் திருமாலிருஞ்சோலை முதலிய திவ்யதேசங்களைப் பற்றிய ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் இவற்றைக் காணலாம். குறையல் பிரானின் (திருமங்கையாழ்வாரின்) அருளிச் செயல்களில் இயற்கைக் காட்சிகள் பெருமளவில் இடம் பெறுகின்றன.

மயில்கள் ஒலி செய்வதை அகவுதல் என்றும், குயில்களின் ஒலியைக் கூவுதல் என்றும் வண்டுகளின் ஒலியை முரலுதல் என்றும் கூறுவர். இடமோ மண்ணியாற்றின் கரை! எங்கும் மலர்ச் சோலைகள்! சோலைகளில் எப்போதும் தேன் மணம் வீசுகிறது! வண்டுகள் தேனைப்பருகிவிட்டு பெருங் களிப்போடு இசைபாடுகின்றன. ஆண்டாள் கீசு கீசு என்று ஆனை சாத்தன் பறவையின் ஒலியைக் குறிப்பிட்டாள். 'வண்டுகள் தேதென' வென்று இசைபாடுகின்றனவாம். ஓரிடத்தில் இவ்வொலியை 'தென்னா தெனா' வென்று ஆழ்வார் குறிப்பிடுகிறார். மற்றோரிடத்தில் தென்ன வென்ன வண்டின்னிசை முரல்' என்கிறார். ஏன் இவ்வளவு ஈடுபாடு? வண்டுகள் மலரையே சுற்றிக்கொண்டிருக்கும். இவரும் பகவானது திருவடித்தாமரைகளையே நாடி இருப்பவர். வண்டுக்கு ஷட்பதம் என்று பெயர். இவரும்

ஷட்ப்ரபந்தத்தை அருளிச்செய்தவர். வண்டுகளின் ஒலி இனிமை; இவரது பாசுரங்கள் தேனினும் இனிமை. இப்படிப்பட்ட ஒற்றுமைகள் இருப்பதனாலேயே இவரது மனம் வண்டுகளின் இசையில் பதிந்ததோ!

**கோலப் பெருஞ் சங்கு:—** பகவானின் கையில் வீற்றிருக்கும் சங்கு பாஞ்சஜந்யம் எனப்படும். மிக்க வெண்மையான இச்சங்கு பகவானின் திருமேனிக்கே தனியழகைத் தருகிறது. இதன் ஒலி பகைவர்களுக்கு அச்சத்தையும், அடியார்களுக்கு மகிழ்ச்சியையும் அளிக்கவல்லது. பாரத யுத்தத் தொடக்கத்திலேயே பகைவர்கள் அஞ்சி ஓடும்படி செய்தது. துருவனுக்கு மெய் ஞானத்தை அளித்தது. திருத்தேவனார் தொகை என்னும் இவ்வூரிலுள்ள மாதவன் தான் முன்னொருகால் தேவலோகத்திலிருந்து பாரிஜாத மரத்தைக் கொண்டு வந்தான். கொண்டுவர முடிவு செய்து பாஞ்சஜன்யத்தை ஒலித்தான்; அவ்வொலி எண்திசைகள் கடல்கள், மலைகள் ஆகியவற்றை நடுங்கச் செய்தனவாம். ஆனால், ஆண்டாள் மட்டும் சங்கொலியைக் கேட்கவும் சங்கொலிசெய்யும் போது தோன்றும் பகவானின் திருமுக மண்டலத்தின் அழகையும் ஸேவிக்கத் துடிக்கிறான். 'படைபோர் புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே' என்று நாமும் பல்லாண்டு பாடும்படி மாதவன் எழுந்தருளி இருக்கிறான்.

**ஆர்க்கும் வலம்புரியாலண்டமு மெண்டிசையும்**
**கார்க்கடலும் வெற்பும் கலங்கின வாற்—சீர்க்கும்**
**திருத்தேவனார் தொகை மால் செவ்வாய் வைத்தூதத்**
**திருத்தேவனார் தொகையுஞ் சாய்ந்து.**

*நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி 33*